

# குரங்கும் முதலையும்




# குரங்கும் முதலையும்





நதிக்கரையின் ஓரத்தில் நாவல்மரம் ஒன்று இருந்தது. அம்மரத்தின் பழங்கள் மிகவும் சுவையாக இருக்கும். குரங்கு ஒன்று தினமும் அம்மரக்கிளையில் அமர்ந்து பழங்களைச் சுவைத்துச் சாப்பிடும். அவற்றை முதலை ஒன்று பார்த்தது. முதலையைப் பார்த்தக் குரங்கு “நண்பனே! நீயும், நாவல்பழம் சாப்பிடுகிறாயா?” என்று கேட்டு, முதலைக்கும் கொஞ்சம் கொடுத்தது.



முதலைக்கும் அந்தப் பழம் மிகவும் பிடித்து இருந்தது. பின் இருவரும் நண்பர்கள் ஆனார்கள். சில நாட்கள் சென்றன. ஒரு நாள் முதலை தன் மனைவியிடம் நாவல்பழத்தின் சுவையையும் குரங்கு நண்பனின் நட்பையும் பெருமையாகக் கூறியது. அதைக் கேட்ட முதலையின் மனைவி “அந்தப் பழமே இவ்வளவு சுவையாக இருக்கும் போது அதை உண்ணும் அக்குரங்கின் இதயம் எவ்வளவு சுவையாக இருக்கும்” என்று கூறியது.



மனைவியின் வற்புறுத்தலால் முதலை, குரங்கைத் தன் வீட்டிற்கு விருந்திற்கு அழைத்தது. செல்லும் வழயில் முதலை தன் மனைவி கூறியதைக் குரங்கிடம் கூறியது. அதைக் கேட்ட குரங்கு திகைத்தது. “அடடே! நண்பா, நான் என் இதயத்தை அந்த மரத்திலேயே வைத்துவிட்டேனே, நீ முன்பே கூறியிருந்தால் நாம் அதை உன் மனைவிக்காக எடுத்து வந்துருக்கலாமே?” என்று குரங்கு முதலையிடம் கூறியது.



அதைக் கேட்ட முதலை, “இதயத்தை எடுத்துச் செல்லலாம்” என்று கூறி கரையின் பக்கம் வந்தது. உடனே குரங்கு முதலையின் மேல் இருந்து கரையை நோக்கி தாவியது. பின் குரங்கு முதலையைப் பார்த்து “உனது உண்மையான குணம் எனக்குத் தெரிந்துவிட்டது.” இனிமேல் இந்த நாவல்மரத்தடிக்கு வராதே! என்று கூறியது.



# கதையின் நீதி

உண்மையான நட்புடன் பழக வேண்டும்.